1984 மார்ச் 15]

தேர்வுகளில் பார்த்து எழுதுதல்

*99 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுகளில் மாணவர்கள் காப்பி அடிப்பதை சட்டபூர்வமாகத் தடை செய்யுமாறு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெற்றோர்களிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, மாணவர்கள் ஒழுங்கு பற்றி அமைச்சர் அவர்களாலே ஒரு குழு அமைக்கப்பட்டு அதுவும் இதுபற்றி கருத்து தெரிவித்திருந்தது. அந்த அடிப்படையில் இப்போது காப்பியடிப்பது குறைந்திருக்கிறதா? மாணவர்களிடையே கட்டுப்பாடு இருப்பதாக அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, முன்பு இருந்ததைவிட இப்போது நிலைமை சீரடைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி ஆ. லீலாவதி: தலைவர் அவர்களே, பறக்கும் படை என்ற ஒரு படையை உருவாக்கி அதனால் மாணவர்கள் காப்பி அடிப்பதைத் தடுத்திருக்கிறார்கள். அப்படியென்றால் எந்த அளவுக்கு அதன் மூலம் காப்பியடிப்பதைத் தடுப்பதற்கு உபயோகமாக அது இருந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, காப்பி அடிக்கிற பழக்கம் இருக்கும் என்ற நிலையில்தான் பறக்கும் படை போன்று திடீரென்று போய் அங்கே சோதிக்கிற ஒரு குழுவை அனுப்பிக் கொண்டு வருகிறோம். அதனால் பெரும்பாலான இடங்களில், அதிலும் இப்படிப்பட்ட புகார்கள் வந்த இடங்களில்கூட நிலைமை சீரடைந்திருக்கிறது என்று நமக்குத் தகவல் வந்திருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS